4. அறிவிப்புகள்

(அ) "காகிதமில்லா சட்டமன்றம்" எனும் இலக்கினை எய்திடும் வகையில் உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல்களில் சில விவரங்கள் மற்றும் குழுக்களின் அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக, 2019 ஆம் ஆண்டிற்கான முதலாவது பட்டியல் முதல் ஏழாவது பட்டியல் வரையிலான, தலா 1 முதல் 100 வரையிலான வினாக்கள்–விடைகளை உள்ளடக்கிய, ஏழு உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல்களில், உடுக்குறியிடாத வினாக்களின் எண்கள் மற்றும் உறுப்பினர் பெயர் ஆகிய விவரங்களை மட்டும் உள்ளடக்கிய அட்டவணைப் பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் வடிவம்* (Soft Copy) PDF *வடிவில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளன. இதன் அச்சிடப்பட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறாது என்பதைப் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகளின் நகல்கள், சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பெறும் என்பதையும், மேலே கூறப்பட்ட இப்பட்டியல்களின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளன என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

இதேபோன்று, 2018–2019 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 58 முதல் 62 வரையிலான 5 அறிக்கைகள்; பொது நிறுவனங்கள் குழுவின் 65 முதல் 72 வரையிலான 8 அறிக்கைகள் மற்றும் அரசு உறுதிமொழிக் குழுவின் 35 முதல் 39 வரையிலான 5 அறிக்கைகளின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் மின்னஞ்சல்மூலம் பேரவைச் செயலகத்தால் அனுப்பி வைக்கப்படும் என்பதைப் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11—55

திரு. துரைமுருகன்: எல்லோருக்கும் இந்த மின்னஞ்சல் பற்றித் தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் இல்லை, இல்லை. Slow ஆக, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் செய்கிறோம்.

திரு. துரைமுருகன்: இது எப்படி இருக்கிறது என்று இரண்டு மாதங்கள் பாருங்கள். எனக்கே மின்னஞ்சலிலிருந்து நகல் எடுக்கத் தெரியாது. பிறகு என்ன செய்வது? அதற்காகத்தான் சொல்கிறேன். எல்லோருக்கும் மின்னஞ்சல் பற்றி தெரியாது. உடனே மின்னஞ்சலில் கொடுத்துவிடாதீர்கள். கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். 3 மாதங்கள் அல்லது 6 மாதங்கள் அவகாசம் கொடுத்துப் பாருங்கள். பயிற்சி கொடுப்பது மாதிரி இதுபற்றி எல்லோருக்கும் training கொடுங்கள். இதுமாதிரி ஒரே நாளில் திடுதிப்பென்று அறிவித்தீர்களென்றால் எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. திடுதிப்பென்று இல்லை. இந்த Paperless Assembly என்பது, நாம் முன்பே announce செய்தது. அதை நடைமுறைப்படுத்துகிற வழியாகத்தான் இப்பொழுது இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாக எடுக்கலாம். எடுத்தவுடனே எல்லாம் முழுமையாக செய்வதுமாதிரி இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக, stage by stage ஆகத்தான் செய்கிறோம். முதல் step இன்றைக்கு announce செய்திருக்கிறோம். இதற்கு எப்படி response வருகிறதென்று பார்த்துவிட்டு அதற்குத் தகுந்தமாதிரி உறுப்பினர்களுக்கு உரிய முறைப்படி அது செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.